**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண். 492/2019**
**நாள் 03/10/2024,வியாழக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - கோட்டீஸ்வரி | த/பெயர் - டில்லிபாபு |
| வயது - 33 | தொழில் - |
| விலாசம் - என்.ஜி.ஓ. நகர், பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். | |

**முதல் விசாரணை (PW1)**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்படுத்தப்பட்ட விபத்துக்கு 1மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக தாக்கல் செய்துள்ளேன். என் தரப்பு சான்றாவணமாக ம.சாஆ.1 முதல் ம.சா.ஆ. 9 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டும்.

1. (1). முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா ஆ 1** ஆகவும்,
   (2). விபத்து பதிவேட்டு நகல் **ம.சா ஆ 2** ஆகவும்,
   (3). வாகனப் பதிவு சான்று நகல் **ம.சா ஆ 3** ஆகவும்,
   (4). காப்பீட்டு சான்று நகல் **ம.சா ஆ 4** ஆகவும்,
   (5). ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா ஆ 5** ஆகவும்,
   (6). மருத்துவ விடுப்பு அறிக்கை அசல் **ம.சா ஆ 6** ஆகவும்,
   (7). கதிரியக்கப்படம் **ம.சா ஆ 7** ஆகவும்,
   (8). மருத்துவ செலவு ரசீது அசல் **ம.சா ஆ 8** ஆகவும்,
   (9). குற்றப்பத்திரிக்கை நகல் **ம.சா ஆ 9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினர் என்பதால் குறுக்கு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**